## வரையறுக்கப்பட்ட என்எஸ்பீ நிதிய முகாமைத்துவக் கம்பனி - 2016

---

வரையறுக்கப்பட்ட என்எஸ்பீ நிதிய முகாமைத்துவக் கம்பனியின் ("கம்பனி") 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

---

### 2.1 அபிப்பிராயம்

---

கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

---

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவது,

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வங்கியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் வங்கியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

## 3. நிதிசார் மீளாய்வு

---

### 3.1 நிதிசார் விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 252,762,389 ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 109,141,803 ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 143,620,586 அல்லது 57 சதவீத பின்னடைவைச் சுட்டிக்காட்டுகின்றது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மீதான வட்டிச்செலவீனங்கள் மற்றும் நிதிக்கருவிகளை அதனுடைய நியாயப்பெறுமதியில் மதிப்பிடுவதன் மூலம் ஏற்பட்ட நட்டம் போன்றன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 183,390,059 மற்றும் ரூபா 101,195,961 ஆல் அதிகரித்தமை இந்தப் பின்னடைவிற்குப் பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

### 3.2 பெறுமதிச் சேர்க்கை

---

மீளாய்வாண்டிற்கான இலாபம் ரூபா 79,417,377 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான ரூபா 78,972,710 கூட்டுத்தொகையான ஆளணி வேதனங்கள், பெறுமானத்தேய்வு மற்றும் வரிச்செலவீனம் போன்றவற்றை கணக்கிலெடுத்ததன் பின்னரான கம்பனியின் பெறுமதிச் சேர்க்கையானது 2015 ஆம் ஆண்டில் ரூபா 309,886,722 இலிருந்து 2016 இல் ரூபா 158,390,087 இற்கு குறைவடைந்திருந்தது

### 3.3 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

--------------------------------------------------------------------------------

### 3.3.1 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

---------------------------------------------------------------------------------------

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டிற்கான கம்பனியின் கணக்கீட்டு விகிதங்களை மீளாய்வு செய்த பின்னரான சில முக்கிய அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) கம்பனியின் இடர்நிறையளிக்கப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் 22 சதவீத துறைரீதியான விகிதத்தை விட அதிகமாகவிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 7 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) கம்பனியின் சராசரிச் சொத்துக்கள் மற்றும் சராசரி உரிமையாண்மை மீதான வருமானம் 2015 ஆம் ஆண்டிலிருந்து முறையே 2 சதவீதம் மற்றும் 14 சதவீதத்திலிருந்து 2016 ஆம் ஆண்டில் முறையே 1 சதவீதம் மற்றும் 6 சதவீதத்திலிருந்து குறைவடைந்திருந்தது. மேலும், அத்தகைய விகிதம் மீளாய்வாண்டிற்கான துறை விகிதங்களை விட குறைவாக இருந்தது.

(இ) கம்பனியின் அடிப்படை மூலதனம் 2015 ஆண்டிலிருந்து ரூபா 1,731 மில்லியனிலிருந்து 2016 ஆம் ஆண்டில் ரூபா 1,691 மில்லியனுக்கு 2 சதவீதத்தால் குறைவடைந்தது. எனினும், அடிப்படை மூலதனமானது ரூபா 1,000 மில்லியனான ஆகக்குறைந்த தேவைப்பாட்டை விட அதிகமாகவிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------------------

### 4.1 வங்கியின் செயலாற்றல்

---------------------------------------------------------

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், கம்பனியின் பிரதான நோக்கங்கள் பின்வருமாறு,

(அ) முதற்தர நடுவராக வணிகத்தை நடாத்துதல்.

(ஆ) திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், மற்றும் ஏனைய அரசாங்க மற்றும் மத்திய வங்கியின் பிணையங்களிலுள்ள இரண்டாந்தர சந்தைக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடல்.

(இ) திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், மற்றும் அரசாங்கம் மற்றும் மக்கள் வங்கியின் பிணையங்களின் இரண்டாந்தர சந்தையொன்றை மேம்படுத்தி அபிவிருத்தி செய்தல்.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை அடைவதற்காக, துறைரீதியான தகவல்களுடன் ஒப்பிடும் போதான 2015, 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைகளில் மேற்கொள்ளப்பட்ட மொத்த முதலீடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| முதலீட்டின் தன்மை | துறை | கம்பனி | |
|---|---|---|---|
| | 2016 | 2016 | 2015 |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| வியாபார பிணையங்கள் | 98,100 | 7,013 | 4,262 |
| முதிர்ச்சியடைபவை | 106,800 | 1,801 | 2,211 |
| விற்பனைக்கு தயாரானவை | 19,300 | 1,894 | 2,020 |
| **மொத்த முதலீடுகள்** | **224,200** | **10,708** | **8,493** |

மேற்கூறப்பட்ட தகவல்களின் பிரகாரம், அரச பிணையங்களிலிருந்து அதிகூடிய வட்டி வருமானத்தை உழைப்பதற்காக வியாபார பிணையங்களாக அதனுடைய மூலதனக் கலவைகள் 65 சதவீதத்தை கம்பனி பராமரித்தது. எனினும், அத்தகைய அதிகூடிய மூலதனக் கலவையை பேணுதல் கம்பனிக்கு அதிகூடிய சந்தை இடரை உருவாக்கும்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் அத்தியாயம் 5 இன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டத்தையும் செயல்நடவடிக்கைத் திட்டத்தையும் கம்பனி தயாரித்திருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிதி முகாமைத்துவம் | கைத்தொழில் நியமங்களுக்கு இணைவாக சராசரி சொத்துக்கள் மற்றும் சராசரி உரிமையாண்மை மீது ஆரோக்கிய வருமானத்தை பேணுவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) திட்டமிடல் | கம்பனியினது இலக்கிடப்பட்ட காலப்பகுதியினுள் அதனுடைய பிரதான நோக்கங்களை அடைவதற்காக கூட்டிணைந்த திட்டமொன்றையும் செயல்நடவடிக்கைத் திட்டமொன்றையும் தயாரித்திருக்கவில்லை. |